1. Institutions where money drawn on self cheque for disbursement – it is necessary to maintain which of the following Register?

(A) Advance Register
(B) Chitta Register
(C) Petty Cash Book
(D) Stock Register

வங்கியிலிருந்து சுய காசோலை (Self cheque) மூலமாக ஈர்க்கப்படும் தொகையினை கண்காணிக்க அற நிறுவனங்களில் கீழ்க்கண்ட எந்த பதிவேடு அவசியமானதாகும்?

(A) முன்பணப் பதிவேடு
(B) சிட்டா பதிவேடு
(C) சில்லரை செலவு பதிவேடு
(D) இருப்புக் கணக்கு பதிவேடு

2. A register of revenue yielding properties which shows the income yielded from the property of the religious institution is

(A) Property Register
(B) M D R
(C) Stock Register
(D) Revenue Register

அற நிறுவனங்களின் சொத்துக்கள் மூலம் வருவாய் ஈட்டுதல் விவரம் மற்றும் சொத்துக்களை அறிய உதவும் பதிவேடானது

(A) சொத்துக்கள் பதிவேடு
(B) பலவகை கேட்பு பதிவேடு
(C) இருப்பு விவரப் பதிவேடு
(D) வருவாய் பதிவேடு

3. Petty cash book maintained vide columns as prescribed in

(A) Form No. 10
(B) Form No. 1
(C) Form No. 9
(D) Form No. 11

சில்லரை தொகை இருப்பு பதிவேடு கீழ்க்கண்ட எந்த கலங்களின் மூலம் கண்காணிப்பது எளிதாகும்

(A) படிவம் 10
(B) படிவம் 1
(C) படிவம் 9
(D) படிவம் 11

4. The contractors dues unclaimed shall be kept in

(A) Unclaim Registers
(B) Auction Register
(C) Agreement Register
(D) Deposits Register

அறநிறுவனம் மூலம் திருப்பி வழங்கப்பட வேண்டிய கேட்பாரற்ற ஒப்பந்தத் தொகைகளை கொண்டு செல்ல வேண்டிய பதிவேடு எது?

(A) பலவகை பதிவேடு
(B) ஏலப் பதிவேடு
(C) ஒப்பந்தப் பதிவேடு
(D) வைப்பு பதிவேடு

5. Off the following items, which one shall not be credited to any "Deposits Head"

(A) Security amount (B) Tender amount

(C) Auction amount (D) Pay and allowances amount

கீழ்க்கண்ட எந்த இனத்தை எந்த வைப்புத் தொகை தலைப்பிலும் இருப்பாக வைக்க இயலாது?

(A) பிணையத் தொகை (B) டெண்டர் வரவுத் தொகை

(C) ஏலக் குத்தகை தொகை (D) சம்பளம் (ம) இதர தொகை

6. Which among the following shall be kept in deposits head of account?

(A) Pay (B) FINES

(C) Leave salary (D) Unaccounted amounts

கீழ்க்கண்ட எந்த இனத்தை வைப்புத் தொகையாக இருப்பில் வைக்க இயலும்?

(A) சம்பளம் (B) அபராத தொகைகள்

(C) விடுப்பு சம்பளம் (D) விவரமில்லா தொகை

7. Security from any office holding servants shall not be accepted in form of

(A) Cash (B) Post office deposits

(C) Government promissory notes (D) Jewels

பணியாளர் பிணை வைப்பாக கீழ்க்கண்ட எந்த இனத்தினை ஏற்க இயலாது?

(A) ரொக்கம் (B) அஞ்சல் வைப்புகள்

(C) அரசு பண பத்திரம் (D) நகைகள்

8. Which among the following income can be considered as current income?

(A) Interest on investment (B) Matured investment

(C) New investment (D) Charges reimbursed

கீழ்க்கண்ட எந்த தலைப்பினம் நடப்புக்கால பசலியின் வருவாயாகும்?

(A) முதலீடு வட்டி (B) முதிர்வடைந்த முதலீடு

(C) புதிய முதலீடு (D) செலவுக்கான வரவு

9. Which of the following is not a new investment?

(A) Reinvestment (B) Surplus fund investment

(C) Interest invested (D) Deposits invested

கீழ்க்கண்ட இனங்களில் எந்த இனம் புதிய முதலீடு ஆகாது?

(A) முறு முதலீடு (B) உபரி நிதி முதலீடு

(C) முதலீடு வட்டி (D) வைப்பு நிதி முதலீடு

10. "Mahout" is appointed in the temple to control and maintain which animal?

(A) Horse (B) Peacock

(C) Cow (D) Elephant

"மாவுத்தர்" என்னும் பணியிடம் திருக்கோயில்களில் எந்த விலங்கினை பராமரிக்க ஏற்படுத்தப்பட்டது?

(A) குதிரை (B) மயில்

(C) பசு (D) யானை

11. The period of lapsing of unclaimed deposits is ———— years.

(A) one (B) two

(C) three (D) five

———— வருடத்திற்கு மேல் கணக்கில் இருந்து வரும் கேட்பாரற்ற வைப்பு தொகைகளை பலவகை வரவில் கணக்கில் வைத்து முடித்திடல் வேண்டும்.

(A) ஒரு (B) இரண்டு

(C) மூன்று (D) ஐந்து

12. Following is not an asset of an institution

(A) Loan recoverable (B) Loan refundable

(C) Auction deposits (D) Rental deposits

கீழ்க்கண்ட எந்த இனம் அறநிறுவனத்தின் இருப்பாக இருக்க முடியாது?

(A) கடன் வசூலிக்க வேண்டியது (B) கடன் திருப்ப வேண்டியது

(C) ஏல வைப்பு (D) வாடகை வைப்பு

13. Form No. 50 denotes what statement

(A) Regarding Inam (B) Regarding trees and thopes

(C) Lands (D) Patta transfer

படிவம் 50 எதனை கண்காணிப்பதற்கு சம்பந்தப்பட்டதாகும்

(A) இனாம் குறித்து (B) மரங்கள் மற்றும் தோப்பு குறித்து

(C) நிலங்கள் (D) பட்டாபெயர் மாற்றம் குறித்து

14. Form No. 25 is related to

(A) Hundial (B) Rent collection

(C) Ubhayam (D) Grains

படிவம் 25 எதனுடன் சம்பந்தப்பட்டது

(A) உண்டியல் (B) வாடகை வசூல்

(C) உபயம் (D) தானியங்கள்

15. Which one of the following will not come under secular expenditure of Utsavams?

(A) Feasts (B) Processions

(C) Entertainment of devotees (D) Pooja expenditures

உற்சவ செலவினத்தில் கீழ்க்கண்ட எந்த செலவினம் மதம் சம்பந்தப்பட்டது ஆகும்?

(A) அன்னதானம் (B) ஊர்வலம்

(C) பக்தர்களுக்கான (D) பூஜை செலவுகள்

16. Dhittam register should be got approved for ———— years once.

(A) Five (B) Ten

(C) Three (D) One

———— வருடத்திற்கு ஒரு முறை திட்டம் பதிவேடு புதுப்பிக்கப்பட வேண்டும்.

(A) ஐந்து (B) பத்து

(C) மூன்று (D) ஒரு

17. Refund of security deposits shall not be made before ———— months, after the servants vacates the office.

(A) six months (B) one year

(C) three months (D) two years

ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளரது பிணை வைப்புத் தொகை ———— காலத்திற்கு முன் வழங்கப்படுதல் கூடாது.

(A) ஆறு மாதங்கள் (B) ஒரு வருட காலம்

(C) மூன்று மாதங்கள் (D) இரண்டு வருட காலங்கள்

18. The minimum eligibility serving for claiming gratuity is

(A) twenty years (B) five years

(C) fifteen years (D) ten years

———— வருடங்கள் பணி புரிந்து ஓய்வு பெற்றவர் மட்டுமே பணிக்கொடை பெறுவதற்கு தகுதியுடையவராவார்.

(A) இருபது வருடங்கள் (B) ஐந்து வருடங்கள்

(C) பதினைந்து வருடங்கள் (D) பத்து வருடங்கள்

19. A temple employee enrolled in contributory provident fund (CPF) is not eligible for

(A) Family benefit fund (B) Pension

(C) Health insurance (D) Gratuity

பணியாளர் சேமநல நிதி திட்டத்தில் அங்கத்தினராக உள்ள திருக்கோயில் பணியாளருக்கு கீழ்க்கண்ட தொகை பெற தகுதியில்லை – அது எது?

(A) குடும்ப நல நிதி (B) ஓய்வூதியம்

(C) மருத்துவ காப்பீடு (D) பணிக்கொடை

20. A fraction of ———— and above can be taken as one completed year for computing total service for gratuity.

(A) six months (B) eight months

(C) three months (D) nine months

பணியாளருக்கான பணிக்கொடை கணக்கிடும் பொழுது குறைந்தபட்சம் எந்த காலத்திற்கு மேல் ஒரு முழு ஆண்டாக கணக்கில் கொள்ள இயலும்?

(A) ஆறு மாதங்கள் (B) எட்டு மாதங்கள்

(C) மூன்று மாதங்கள் (D) ஒன்பது மாதங்கள்

21. Family benefit fund scheme is applicable only for

(A) Regular servants of religious institution

(B) Servants of Maths

(C) Specific endowments

(D) Part time servants

குடும்ப நல நிதி பெறுவதற்கு கீழ்க்கண்ட திருக்கோயில் பணியாளர் மட்டுமே தகுதியுடையவராவார்

(A) அறநிறுவனத்தின் நிரந்தர பணியாளர்

(B) மடங்களின் பணியாளர்

(C) மடங்களை சார்ந்த குறிப்பிட்ட அறக்கட்டளை பணியாளர்

(D) பகுதிநேர பணியாளர்

22. Thirupani works should be supervised under which prescribed form

(A) FORM NO. 95 (B) FORM NO. 66

(C) FORM NO. 67 (D) FORM NO. 69

திருப்பணி வேலைகளை முறையாக கண்காணிக்க உரிய படிவம் இதுவாகும்

(A) படிவம் 95 (B) படிவம் 66

(C) படிவம் 67 (D) படிவம் 69

23. Measurements regarding Thirupani and other works related with institutions is dealt vide

(A) FORM NO. 66 (B) FORM NO. 70

(C) FORM NO. 93 (D) FORM NO. 71

திருப்பணி அளவீடு பதிவேடு கீழ்க்கண்ட உரிய படிவத்தில் கண்காணிக்கப்பட வேண்டும்

(A) படிவம் 66 (B) படிவம் 70

(C) படிவம் 93 (D) படிவம் 71

24. Investments of money other than banks like promissory notes or other securities are allowed vide which rule?

(A) 116(2)(xi) of rule 7 (B) 116(2)(xi) of rule 4

(C) 116(2)(xi) of rule 1 (D) 116(2)(xi) of rule 6

அறநிறுவனங்களின் முதலீடுகளை வங்கிகள் தவிர வேறு பாதுகாப்பான பத்திரங்களாகவும் முதலீடு செய்யலாம் என அனுமதிக்கும் சட்டமானது எது?

(A) 116(2)(xi) விதி 7 (B) 116(2)(xi) விதி 4

(C) 116(2)(xi) விதி 1 (D) 116(2)(xi) விதி 6

25. ———— is the authority for handling common good fund of the department.

(A) Joint Commissioner (B) Additional Commissioner

(C) Inspector (D) Commissioner

அறநிலையத் துறையின் பொதுநல நிதியினை இயக்கும் அதிகாரம் இவருக்கு மட்டுமே உண்டு

(A) இணை ஆணையர் (B) கூடுதல் ஆணையர்

(C) ஆய்வாளர் (D) ஆணையர்

26. If the Annual income is below Rs. ———— of an institution, it is exempted from levying audit fees.

(A) 10,001 (B) 7001

(C) 5000 (D) 2001

ஒரு அற நிறுவனத்தின் ஆண்டு வருமானம் ———— க்கு கீழ் இருக்கும் வரை, தணிக்கை கட்டணம் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(A) 10,001 (B) 7001

(C) 5000 (D) 2001

27. The audit reports in respect of Maths and specific endowmnet attached to Maths shall be sent to

(A) Commissioner (B) Government

(C) Chief Audit Officer (D) Assistant Commissioner

மடங்கள் மற்றும் அதனை சார்ந்த குறிப்பிட்ட அறக்கட்டளைகளின் தணிக்கை அறிக்கையினை இவருக்கு அனுப்ப வேண்டும்?

(A) ஆணையர் (B) அரசு

(C) தலைமை தணிக்கை அலுவலர் (D) உதவி ஆணையர்

28. Section 53 of Hindu religious and charitable endowment act deals with

(A) Encroachment of temple lands

(B) Levying of audit fees

(C) Appointment of Executive Officer

(D) Power of dismiss or suspend of the trustees

இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 53-கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?

(A) நிலங்கள் ஆக்கிரமிப்பு (B) தணிக்கை கட்டணம் கணக்கிடுதல்

(C) செயல் அலுவலர் நியமனம் (D) அறங்காவலர்கள் பணிநீக்கம் குறித்து

29. The salary expenses should not exceed the following percentage in the assessible income of the temple in general

(A) 30% (B) 20%

(C) 10% (D) 40%

பொதுவாக அறநிறுவனத்தின் வருவாயில் சம்பள செலவு கீழ்க்கண்ட விழுக்காட்டிற்குள் இருத்தல் வேண்டும்

(A) 30% (B) 20%

(C) 10% (D) 40%

30. Accounts and audits dealt under what section of H.R and CE Act

(A) Section 87 (B) Section 85

(C) Section 79 (D) Section 80

இந்து சமய அறநிலையத்துறையின் எந்த சட்டப்பிரிவு தணிக்கை மற்றும் கணக்குகள் குறித்தானது?

(A) சட்டப்பிரிவு 87 (B) சட்டப்பிரிவு 85

(C) சட்டப்பிரிவு 79 (D) சட்டப்பிரிவு 80

31. Investment opening balance is Rs. 2,000. Closing balance is Rs. 2,480 in the end of falsi. The difference is due to interest invested – Which means?

(A) No reinvestment (B) No deposit investments

(C) No savings (D) New investment is made

முதலீட்டின் ஆரம்ப இருப்பு ரூ. 2,000. இறுதியிருப்பு ரூ. 2,480 முதலீடு வித்தியாசம் முதலீடு வட்டியினால் ஏற்பட்டுள்ளது – எனில் இப்பரிவர்த்தனையில்

(A) மறு முதலீடு எதுவுமில்லை (B) வைப்புதொகை முதலீடு ஏதுமில்லை

(C) சேமிப்பு எதுவுமில்லை (D) புதிய முதலீடு செய்யப்பட்டுள்ளது

32. Budgets of religious institutions dealt under

(A) Section 85 (B) Section 86

(C) Section 78 (D) Section 51

வரவு செலவு திட்ட அங்கீகாரம் குறித்து எந்த சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது?

(A) சட்டப்பிரிவு 85 (B) சட்டப்பிரிவு 86

(C) சட்டப்பிரிவு 78 (D) சட்டப்பிரிவு 51

33. Any person aggrieved by an order passed by the commissioner shall appeal to the court within what period as shown below

(A) 60 days (B) 30 days

(C) one week (D) 90 days

ஆணையர் உத்தரவில் திருப்தியில்லாத பட்சத்தில் கீழ் குறிப்பிட்ட எந்த காலத்திற்குள் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம்

(A) 60 நாட்கள் (B) 30 நாட்கள்

(C) ஒரு வார காலம் (D) 90 நாட்கள்

34.

| Head | Opening balance | Income | Total | Expenditure | Closing balance |
|---|---|---|---|---|---|
| Investment | –32000 | 8119 | –23881 | –Y– | –30000 |

then "Y" is equal to

(A) –2,000 (B) 6,119

(C) –6,119 (D) 30,000

| செலவு தலைப்பு | ஆரம்ப இருப்பு | வரவு | கூடுதல் | செலவு | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|
| முதலீடு | –32000 | 8119 | –23881 | –Y– | –30000 |

இதில் "Y' யாது?

(A) –2,000 (B) 6,119

(C) –6,119 (D) 30,000

35. Appointment of executive officers made as per what section of H.R and CE Act

(A) Section 70 (B) Section 60

(C) Section 74 (D) Section 81

அறநிறுவனங்களுக்கான எந்த சட்டத்தின் கீழ் செயல் அலுவலர்கள் நியமனம் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது?

(A) சட்டப்பிரிவு 70 (B) சட்டப்பிரிவு 60

(C) சட்டப்பிரிவு 74 (D) சட்டப்பிரிவு 81

36. Posting register is maintained as prescribed vide

(A) Form 92 (B) Form 89

(C) Form 96 (D) Form 71

மாதாந்திர வரவு செலவினை முறையாக பதிந்து கண்காணித்திட எந்த படிவம் பொருந்துவதாகும்?

(A) படிவம் 92 (B) படிவம் 89

(C) படிவம் 96 (D) படிவம் 71

37. Uchikala Kattalai is an endowment connected with

(A) Early morning worship (B) Evening worship

(C) Mid day worship (D) Arthajama worship

உச்சிகால கட்டளை என்பது எந்த கால பூஜையுடன் தொடர்புடையது?

(A) அதிகாலை (B) மாலை

(C) மதியம் (D) அர்த்தஜாம வேலை

38. Encroachment in temple premises dealt under what section?

(A) Section 84 (B) Section 85

(C) Section 74 (D) Section 78

திருக்கோயில் இடத்தின் ஆக்கிரமிப்பு தொடர்பான நடவடிக்கை குறித்து எந்த சட்டப்பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளது?

(A) சட்டப்பிரிவு 84 (B) சட்டப்பிரிவு 85

(C) சட்டப்பிரிவு 74 (D) சட்டப்பிரிவு 78

39. Qualification of trustees was explained in what section of the following

(A) Section 25 (B) Section 25-A

(C) Section 50 (D) Section 7

அறங்காவலர் தகுதிகளாவன – கீழ்க்கண்ட எந்த சட்டப்பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளது?

(A) சட்டப்பிரிவு 25 (B) சட்டப்பிரிவு 25-A

(C) சட்டப்பிரிவு 50 (D) சட்டப்பிரிவு 7

40. Disqualification of trustees was explained in what section of the following

(A) Section 26 (B) Section 24

(C) Section 17 (D) Section 12

இவர் அறங்காவலராக இருக்க தகுதியில்லை என்ற காரணங்கள் இந்து சமய அறநிலையத்துறையின் எந்த சட்டப்பிரிவு சுட்டிக்காட்டுகிறது

(A) சட்டப்பிரிவு 26 (B) சட்டப்பிரிவு 24

(C) சட்டப்பிரிவு 17 (D) சட்டப்பிரிவு 12

41. Fixing of lease rent was done by fair rent fixation committee based on

(A) Market value and Govt. guide line value

(B) Guide line value

(C) Rental space

(D) Lessee income

நியாய வாடகை நிர்ணயக் குழுவால் அறநிறுவனங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்ய கீழ்க்கண்ட எந்த காரணி அவசியமாகும்?

(A) சந்தை மதிப்பு மற்றும் அரசுவழி காட்டி மதிப்பு

(B) அரசு வழிகாட்டி மதிப்பீடு

(C) வாடகை இடம்

(D) வாடகைத்தாரர் வருவாய்

42. Which of the following post is appointed through promotion in temples?

(A) Manager (B) Sweeper

(C) Librarian (D) Baarah

அறநிறுவனத்தில் காலியாகவுள்ள எந்த கீழ்க்கண்ட பணியிடம் பதவி உயர்வு மூலம் நியமனம் செய்யப்படுகிறது?

(A) மேலாளர் (B) துப்புறவாளர்

(C) நூலகர் (D) பாரா

43. Which of the following post is filled through direct appointment?

(A) Manager (B) Cashier

(C) Typist (D) Register clerk

அறநிறுவனங்களில் கீழ்க்கண்ட எந்த பணியிடத்தில் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளது?

(A) மேலாளர் (B) காசாளர்

(C) தட்டச்சர் (D) பதிவு எழுத்தர்

44. Which of the following is an ulthurai-post?

(A) Peshkar (B) Electrician

(C) Office Assistant (D) Record clerk

கீழ்க்கண்ட இனங்களில் உள்துறை பணியிடம் எது?

(A) பேஷ்கர் (B) மின்பணியாளர்

(C) அலுவலக உதவியாளர் (D) பதிவெழுத்தர்

45. Which of the following is not related with cooking of Neivedhyam (Prasadam)?

(A) Madapalli (B) Suyambaki

(C) Maniam (D) Paricharagam

பிரசாதம் சமைப்பதில் சம்பந்தமில்லாத பணியிடம் கீழ்க்கண்டவற்றுள் எவை?

(A) மடப்பள்ளி (B) சுயம்பாகி

(C) மணியம் (D) பரிச்சாரகம்

46. Which of the following is related with purchases etc for performances like Pooja and rituals?

(A) Archakar (B) Maniam

(C) Peshkar (D) Odhuvar

அறநிறுவனத்தின் பூஜைப் பணிக்கான வெளிப்புற ஆயத்தப் பணிகளை மேற்கொள்பவர்

(A) அர்ச்சகர் (B) மணியம்

(C) பேஷ்கர் (D) ஓதுவார்

47. Which of the following post should possess a certificate from Agama centres?

(A) Kaingaryam (B) Odal

(C) Ameena (D) Odhuvar

கீழ்க்கண்ட எந்த பணியிடத்திற்கு வேத ஆகம பயிற்சி பெற்றதற்கான சான்று அவசியமானது

(A) கைங்கர்யம் (B) ஓடல்

(C) அமீனா (D) ஓதுவார்

48. Which of the following post should possess certificate from Thevaram and Thirumarai school?

(A) Kaingaryam (B) Paricharagar

(C) Maniam (D) Odhuvar

கீழ்க்கண்ட எந்த பணியிடத்திற்கு தேவாரம் – திருமுறை அறிவுக்கான பள்ளி சான்று அவசியமானது?

(A) கைங்கர்யம் (B) பரிச்சாரகர்

(C) மணியம் (D) ஓதுவார்

49. Rental deposit of a property belonging to religious institution should be a total of twelve months rent as per the following rule

(A) 116(2)(13) Rule 9 (B) 116(2)(13) Rule 5

(C) 116(2)(13) Rule 2 (D) 116(2)(13) Rule 7

கீழ்க்கண்ட எந்த சட்ட விதியின்படி அறநிறுவனத்திற்கு சொந்தமான இடத்திற்கு பன்னிரெண்டு மாத வாடகையினை வைப்புத்தொகையாக பெறப்படுதல் வேண்டும்?

(A) 116(2)(13) விதி 9 (B) 116(2)(13) விதி 5

(C) 116(2)(13) விதி 2 (D) 116(2)(13) விதி 7

50. Which of the following is not listed in 1 to 15 registers?

(A) Pannai cultivation (B) Lease hold lands

(C) Service tenure lands (D) Dhittam

1 முதல் 15 பதிவேடுகளில் இவற்றுள் எந்த பதிவேடு சேராது?

(A) பண்ணை சாகுபடி (B) நிலங்கள் குத்தகை

(C) நிலத்தினை அளக்கும் கால அளவை (D) திட்டம்

51. Schedule of establishment is essential as per section 116(2)(23) of ruling

(A) 14 (B) 13

(C) 2 (D) 12

அறநிறுவனங்களில் சட்டப்பிரிவு 116(2)(23)-ன் கீழ் விதி ―――――――― ன் படி பணியாளர் தொகுதி பட்டியல் அவசியமானது.

(A) 14 (B) 13

(C) 2 (D) 12

52. Service tax deducted from booking parties in Kalyana mandapam belonging to religious institutions should be paid to which department?

(A) Income tax (B) Registration

(C) Central excise (D) Revenue

அறநிறுவனங்களில் உள்ள கல்யாண மண்டபங்களில் நடைபெறும் விழாக்களுக்கு தனியாரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் சேவை வரி எந்த துறைக்கு செலுத்தப்பட வேண்டும்?

(A) வருமான வரி (B) பதிவுத்துறை

(C) மத்திய ஆயத்துறை (D) வருவாய் துறை

53. Which of the following section restricts trustees from borrowing or lending money on behalf of temples?

(A) Section 103 (B) Section 104

(C) Section 105 (D) Section 78

அறநிலையத் துறையின் எந்த சட்டத்தின் படி ஒரு அறங்காவலரால் திருக்கோயில் சார்பாக கடன் பரிவர்த்தனை மேற்கொள்வது தடுக்கப்படுகிறது?

(A) சட்டப்பிரிவு 103 (B) சட்டப்பிரிவு 104

(C) சட்டப்பிரிவு 105 (D) சட்டப்பிரிவு 78

54. Record sheets in temples are maintained – related to which of the following?

(A) Service details of employee (B) Utsavam expenses

(C) Details of temples (D) Pooja details of a temple

திருக்கோயில்களில் பதிவுறுத்தாள் பேணப்படுவது – கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?

(A) பணியாளர்கள் பணி விவரம் (B) உற்சவ செலவு விவரம்

(C) திருக்கோயில் பற்றிய விவரம் (D) திருக்கோயிலின் பூஜை விவரம்

55. While computing gratuity the last ———— salary and its average is taken into account.

(A) Fifteen months (B) Sixth months

(C) Three months (D) Twelve months

பணிக்கொடை கணக்கிடுகையில் ஓய்வு பெற்ற பணியாளரின் கடைசி ———— கால சராசரி சம்பளத்தை கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

(A) பதினைந்து மாதங்கள் (B) ஆறு மாதங்கள்

(C) மூன்று மாதங்கள் (D) பன்னிரெண்டு மாதங்கள்

56. A temple employee is eligible for voluntary retirement after completion of one of the following years

(A) 15 (B) 10

(C) 20 (D) 25

திருக்கோயில் பணியாளரின் விருப்ப ஓய்வுக்கான மொத்த பணிக்காலம் ———— வருடங்களாகும்.

(A) 15 (B) 10

(C) 20 (D) 25

57. No person shall be appointed to a non-hereditary posts unless he has completed the minimum age of

(A) Eighteen (B) Twenty

(C) Twenty five (D) Thirty

அறநிறுவனங்களில் பரம்பரை அல்லாத பணியிட நியமனத்திற்கான குறைந்தபட்ச வயது எது?

(A) பதினெட்டு (B) இருபது

(C) இருபத்தைந்து (D) முப்பது

58. No person shall be appointed to a non-hereditary post if he has completed a maximum age of

(A) Thirty (B) Forty

(C) Twenty five (D) Forty five

அறநிறுவனங்களில் பரம்பரை அல்லாத பணியிட நியமனங்களுக்கான அதிகபட்ச தகுதியுள்ள வயது ———— வரையே ஆகும்.

(A) முப்பது (B) நாற்பது

(C) இருபத்தைந்து (D) நாற்பத்தைந்து

59. If the annual income of the religious institution is below five lakhs in such case the audit fees shall be

(A) 1.5% (B) 1.25%

(C) 4% (D) 10%

ரூ. 5,00,000-க்குட்பட்டு நிகர வரி விதிப்பு வருமானம் உள்ள அறநிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட எந்த விகிதத்தில் தணிக்கை கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது?

(A) 1.5% (B) 1.25%

(C) 4% (D) 10%

60. Proposals for fixing the Dhittam shall be sent to whom, in case of institutions whose assessible income is exceeding 2 lakhs

(A) Commissioner

(B) Joint Commissioner

(C) Assistant Commissioner

(D) Government

இரண்டு இலட்சத்திற்கு மேல் நிகர வரி விதிப்பு வருமானம் பெறும் அறநிறுவனங்களுக்கான திட்டம் யாரால் அங்கீகரிக்கப்படுகிறது?

(A) ஆணையர்

(B) இணை ஆணையர்

(C) உதவி ஆணையர்

(D) அரசு

61. "Dittam" for the institution whose assesible income is exceeding Rs. 10,000 and not exceeding 2 lakhs was fixed by

(A) The Commissioner

(B) Joint Commissioner

(C) Assistant Commissioner

(D) Government

பத்தாயிரத்துக்கு மேலும் இரண்டு இலட்சத்திற்கு உட்பட்டும் நிகர வரி விதிப்பு வருவாய் பெறும் அறநிறுவனங்களுக்கு யாரால் "திட்டம்" அங்கீகரிக்கப்படுகிறது

(A) ஆணையர்

(B) இணை ஆணையர்

(C) உதவி ஆணையர்

(D) அரசு

62. "Dittam" was sanction by ———— in the case of non listed temples.

(A) Commissioner (B) Joint Commissioner

(C) Assistant Commissioner (D) Inspector

பட்டியலில் சேராத திருக்கோயில்களின் "திட்டம்" யாரால் அங்கீகரிக்கப்படுகிறது?

(A) ஆணையர் (B) இணை ஆணையர்

(C) உதவி ஆணையர் (D) ஆய்வாளர்

63. The rules for holding inquiries is framed in section

(A) 116(2)(iii) & (v) (B) 116(2)(iii) & (x)

(C) 116(2)(x) (D) 116(2)(iv)

அறநிறுவன நிர்வாகிகள் மீதான விசாரணை செய்யும் அதிகார வரம்பு கீழ்க்கண்ட எந்த சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) 116(2)(iii) & (v) (B) 116(2)(iii) & (x)

(C) 116(2)(x) (D) 116(2)(iv)

64. The face value of Abhishegam ticket is Rs. 150 and the Archakar share is Rs. 30. If the Archakar share given is Rs. 900 then find the number of tickets sold

(A) 15 (B) 30

(C) 50 (D) 300

அபிஷேக கட்டண சீட்டின் முகமதிப்பு ரூ. 150. அதில் அர்ச்சகர் பங்கு ரூ. 30. வழங்கப்பட்ட மொத்த பங்குதொகை ரூ. 900 – எனில் விற்பனையான சீட்டுகள் எத்தனை?

(A) 15 (B) 30

(C) 50 (D) 300

65. The building rent collection of an institution is Rs. 11,000 per months. Expenses of repair work is Rs. 50,000. Find the amount to be deducted in assessible income.

(A) 14,000 (B) 13,200

(C) 11,000 (D) 10,000

அறநிறுவனத்தின் கட்டிட வாடகை வருவாய் மாதமொன்றுக்கு ரூ. 11,000. பசலி முழுவதற்குமான மராமத்து செலவு ரூ. 50,000 எனில் நிகர வரிவிதிப்பு வருவாயில் கழிக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவு?

(A) 14,000 (B) 13,200

(C) 11,000 (D) 10,000

66. Opening balance of advance is Rs. 18,000. Advance recovered is Rs. 12,000. Advance given is Rs. 15,000. Find the amt of advance to be recovered

(A) 21000 (B) 10000

(C) 15000 (D) 13000

வழங்கப்பட்ட முன்பணத்தின் ஆரம்ப இருப்பு ரூ. 18,000. அதில் திரும்ப வரவு ரூ. 12,000. வழங்கப்பட்ட முன்பணம் ரூ. 15,000 எனில் வசூலிக்கப்பட வேண்டிய முன்பணம் எவ்வளவு?

(A) 21000 (B) 10000

(C) 15000 (D) 13000

67. Form No. 21 deals with sales of

(A) Grains (B) Prasadam sales

(C) Miscellaneous products (D) Books sales

படிவம் 21-ன் மூலம் கீழ்க்கண்ட எதன் விற்பனை மற்றும் இருப்பினை கண்காணிக்க இயலும்?

(A) தானியங்கள் (B) பிரசாத விற்பனை

(C) பலவகை பொருட்கள் (D) புத்தக விற்பனை

68. The eligible medical leave with M.C., for a temple employee upto ten years of service is

(A) 15 days (B) 60 days

(C) 80 days (D) 120 days

பத்து ஆண்டு பணி முடித்த, அறநிறுவனத்தில் பணி புரியும் பணியாளருக்கு கீழ்க்கண்ட எத்தனை நாட்களை மருத்துவ சான்றின் பேரிலான ஈட்டா விடுப்பாக அனுமதிக்கலாம்

(A) 15 நாட்கள் (B) 60 நாட்கள்

(C) 80 நாட்கள் (D) 120 நாட்கள்

69. The eligible medical leave with M.C. for a temple employee on completion of 20 years of service is

(A) 120 days (B) 180 days

(C) 360 days (D) 60 days

அதிகபட்சமாக இருபது ஆண்டுகள் பணி முடித்துள்ள அறநிறுவன பணியாளருக்கு அனுமதிக்கக்கூடிய மருத்துவ சான்றின் பேரிலான ஈட்டா விடுப்பு கீழ்க்கண்ட எது?

(A) 120 நாட்கள் (B) 180 நாட்கள்

(C) 360 நாட்கள் (D) 60 நாட்கள்

70. Unearned leave on medical certificate may be combined with

(A) UEL on L.L.P
(B) Casual leave
(C) Earned leave
(D) UEL without M.C.

மருத்துவ சான்றுடன் கூடிய ஈட்டா விடுப்பினை தொடர்ந்து கீழ்க்கண்ட இவ்விடுப்பினையும் சேர்த்து துய்க்கலாம்

(A) ஈட்டா விடுப்பு
(B) தற்செயல் விடுப்பு
(C) ஈட்டிய விடுப்பு
(D) மருத்துவசான்றில்லா விடுப்பு

71. Leave on medical certificate may be availed along with the eligible leave subject to a maximum limitation of

(A) 120 days
(B) 85 days
(C) 60 days
(D) 100 days

மருத்துவ விடுப்பு மற்றும் தொடர்ச்சியாக துய்க்கப்படும் தகுதியுள்ள விடுப்பின் கூடுதல் ———— நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(A) 120 நாட்கள்
(B) 85 நாட்கள்
(C) 60 நாட்கள்
(D) 100 நாட்கள்

72. Which one of the following is an income under General Account?

(A) Rental income
(B) Deposits
(C) Advances
(D) Loans recovered

கீழ்க்கண்ட எந்த வரவினம் பொதுக்கணக்கின் கீழான வரவாகும்?

(A) வாடகை வருவாய்
(B) வைப்புத்தொகை
(C) முன் பணம்
(D) கடன் வரவு

73. Penalties in connection with encroachment of temple lands is dealt under section ———— of H.R. & C.E. Act.

(A) Section 79-(B)
(B) Section 79-(A)
(C) Section 82
(D) Section 58

திருக்கோயில் நிலங்களின் ஆக்ரமிப்பாளர்கள் மீதான தண்டனை குறித்து எந்த சட்டப்பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளது?

(A) சட்டப்பிரிவு 79-(B)
(B) சட்டப்பிரிவு 79-(A)
(C) சட்டப்பிரிவு 82
(D) சட்டப்பிரிவு 58

74. Payment of compensation was dealt under which section of H.R & C.E. Act

(A) Section 82 (B) Section 78

(C) Section 58 (D) Section 92

அறநிறுவனத்திற்கு சொந்தமான இடத்தின் வாடகைதாரரால் மேற்கொள்ளப்பட்ட அவசிய செலவின் மீதான ஈட்டுத்தொகை குறித்து எந்த சட்டப்பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளது?

(A) சட்டப்பிரிவு 82 (B) சட்டப்பிரிவு 78

(C) சட்டப்பிரிவு 58 (D) சட்டப்பிரிவு 92

75. What is percentage of investments to be made in Nationalized banks?

(A) 25% (B) 80%

(C) 70% (D) 90%

திருக்கோயிலுக்கான மொத்த முதலீட்டில் எத்தனை விழுக்காடுதனை தேசியமயமாக்கப்பட்ட (ம) அட்டவணையிடப்பட்ட வங்கியில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்?

(A) 25% (B) 80%

(C) 70% (D) 90%

76. As per Section 116(2)(10) – No expenditure exceeding Rs. ———— shall be incurred for music performance.

(A) 2,500 (B) 1,500

(C) 3,000 (D) 10,000

சட்டப்பிரிவு 116(2)(10)-ன் படி இசைக்கச்சேரி செலவிற்கு ரூ. ————-க்கு மேல் செலவிடுதல் கூடாது.

(A) ரூ. 2,500 (B) ரூ. 1,500

(C) ரூ. 3,000 (D) ரூ. 10,000

77. The competent authority to order "Write off" in case of amount exceeding Rs. 1,000 but not to exceed Rs. 10,000 is

(A) Joint Commissioner (B) Commissioner

(C) Government (D) Trustee

அறிநிறுவன வரவு செலவு கணக்கு இருப்பில் ரூ. 1,000-க்கு மேலும் ரூ. 10,000-க்குட்பட்டும் உள்ள தொகையினை தள்ளுபடி செய்யும் அதிகாரம் கீழ்க்கண்ட யாருக்கு அதிகாரம் உண்டு?

(A) இணை ஆணையர் (B) ஆணையர்

(C) அரசு (D) அறங்காவலர்

78. The Assistant Commissioner has power to appoint Trustees in respect of non-listed temples as per the following section

(A) Section 46 (B) Section 34

(C) Section 49 (D) Section 65

பட்டியலை சேராத திருக்கோயில்களுக்கு அறங்காவலரை நியமனம் செய்வதற்கான அதிகாரம் கீழ்க்கண்ட எந்த சட்டப்பிரிவின் படி உதவி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) சட்டப்பிரிவு 46 (B) சட்டப்பிரிவு 34

(C) சட்டப்பிரிவு 49 (D) சட்டப்பிரிவு 65

79. A completion report on any construction works of an institution should be in a prescribed manner as shown in

(A) Form No. 97 (B) Form No. 96

(C) Form No. 22 (D) Form No. 23

அறநிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகள் மீதான முடிவறிக்கை கீழ்க்கண்ட விவரப்படி உரிய படிவத்தில் இருத்தல் வேண்டும்

(A) படிவம் 97 (B) படிவம் 96

(C) படிவம் 22 (D) படிவம் 23

80. Money valued forms should be in prescribed manner as shown in

(A) Form No. 96 (B) Form No. 22

(C) Form No. 23 (D) Form No. 97

பண மதிப்புள்ளவைகள் பதிவேடு கீழ்க்கண்ட விவரப்படியான எந்த படிவத்தில் இருத்தல் வேண்டும்?

(A) படிவம் 96 (B) படிவம் 22

(C) படிவம் 23 (D) படிவம் 97

ROUGH WORK

ROUGH WORK